# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

| தரம் : 10 | சைவநெறி | நேரம் : 3.00 மணி |
|---|---|---|
| | சுட்டெண் ............................................... | |

♦ **எல்லா வினாக்களுக்கும் விடை தருக.**
**மிகப் பொருத்தமான விடையின் கீழ்க்கோடிடுக.**

## பகுதி - I

01. ஓம் என்னும் பிரணவரூப நாயகனாக விளங்குபவர்
1. சிவன் 2. விநாயகர் 3. முருகன் 4. விஷ்ணு

02. "சிவன் என்னும் நாமம் தனக்கேயுடைய செம்மேனி அம்மான்" எனக் குறிப்பிட்டவர்
1. திருநாவுக்கரசுநாயனார் 2. திருஞானசம்பந்தமூர்த்தி நாயனார்
3. சுந்தரமூர்த்திநாயனார் 4. மாணிக்கவாசக சுவாமிகள்

03) "எண்ணெண் குணமுறைக்கு இசைந்த வண்ணமே......" என்ற பாடலடியில் குறிப்பிடப்படுவது
1. இறைவனது வடிவம் 2. இறைவனின் தொழில்கள்
3. இறைவனின் எண்குணங்கள் 4. இறைவனின் புகழ்பாடும் இசைப்பாடல்கள்

04) "அன்பே சிவம்" எனக் கூறியவர்
1. திருமூலர் 2. திருவள்ளுவர் 3. ஔவையார் 4. அருணகிரிநாதர்

05) "உள்ளத்தால் பொய்யாது ஒழுகின் உலகத்தார் முன் அறியப்படும்" என்ற கூற்று இடம்பெறுவது
1. திருக்குறளில் 2. நாலடியாரில் 3. சிலப்பதிகாரத்தில் 4. ஆத்திசூடியில்

06) தட்சிணாயன காலமாவது
1. தைமுதல் மார்கழிவரை 2. தைமுதல் ஆனிவரை
3. ஆடிமுதல் மார்கழிவரை 4. ஆடிமுதல் ஆவணி வரை

07) முதல் பஞ்சாங்கம் தோற்றம் பெற்ற காலப் பகுதி
1. சங்ககாலம் 2. சங்கமருவியகாலம் 3. குஷானர்காலம் 4. குப்தர்காலம்

08) ஏழரை விநாடிகள் மாத்திரம் சனி பகவானின் பிடிக்குள் அகப்பட்டவர்
1. விநாயகர் 2. சந்திரன் 3. ஆஞ்சநேயர் 4. உமாதேவியார்

09) "தீபாவளிப்பண்டிகைக் காலத்தில் செய்யும் பூசைகளும் நற்செயல்களும் ஆன்மாக்களை நரகத்தினின்றும் காக்கும்" எனக்கூறும் புராணம்
1. பத்மபுராணம் 2. விநாயகபுராணம் 3. கருடபுராணம் 4. சிவபுராணம்

10) வாழ்க்கையில் புரிந்துணர்வு விட்டுக் கொடுத்தல் அவசியம் என்பதை வலியுறுத்தும் திருமணச் சடங்குகளில் ஒன்று
1. மாலை மாற்றுதல் 2. கணையாழி எடுத்தல் 3. அருந்ததிகாட்டல் 4. பாணிக்கிரகணம்

11) காயத்திரி மந்திரம் இடம்பெறும் வேதம்
1. இருக்குவேதம் 2. யசுர் வேதம் 3. சாமவேதம் 4. அதர்வணவேதம்

12) "நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம்" நரகத்திலிடர்ப்படோம்" என்ற உறுதிப்பாட்டில் வாழ்ந்த நாயனார்.
1. திருஞானசம்பந்தர் 2. சுந்தரமூர்த்திநாயனார் 3. திருநாவுக்கரசுசுவாமிகள் 4. மணிவாசகர்

13) "பாலுக்குப் பாலகன் வேண்டி அழுதிட..." என்ற திருப்பல்லாண்டு பாடப்பட்ட திருத்தலம்
1. திருவீழிமிழலை 2. திருவாவினன்குடி 3. திருவாரூர் 4. சிதம்பரம்

14) பதினோராம் திருமுறையை அருளியோர் எண்ணிக்கை
1. பத்து 2. பன்னிரெண்டு 3. பதின்நான்கு 4. நாற்பத்தொன்று

15) தேவாசிரியன் மண்டபம் அமைந்துள்ள இடம்
1. திருவாரூர் 2. திருப்பனந்தாள் 3. சீர்காழி 4. திருமறைக்காடு

16) கொடியேற்றக் கிரியையில் கொடி மரம் குறித்து நிற்பது
1. ஆன்மா 2. பாசம் 3. பதி 4. கன்மம்

17) தேர் வடிவமைக்கும் கலையை விளக்கும் நூல்
1. பத்ததிகள் 2. சிற்பசாத்திரம் 3. பூர்வகாரணாகமம் 4. மானசாரம்

18) வீதி உலாவரும் இறைவனைத் தரிசிப்பதால் பெறப்படும் தீட்சை
1. சாம்பவ தீட்சை 2. ஔத்திரி தீட்சை 3. சமய தீட்சை 4. மானச தீட்சை

19) பஞ்சாத்தால் வாடிய மக்களின் துயர் துடைக்க சம்பந்தரும் அப்பர் சுவாமிகளும் இறைவனிடம் படிக்காசு பெற்ற தலம்
1. திருத்தணிகை 2. திருவாவினன்குடி 3. திருவீழிமிழலை 4. திருவையாறு

20) "ஆலந்தானுகந்து அமுது செய்தானை......" என்ற பதிகத்தைச் சுந்தரர் பாடியபோது
1. வலக்கண்பார்வை கிடைத்தது 2. இடக்கண்பார்வை கிடைத்தது
3. ஊன்றுகோல் கிடைத்தது 4. பொன் கிடைத்தது

21) முள்ளிச் செடிக்கு முத்தியளித்தவர்
1. மெய்கண்டார் 2. மறைஞானசம்பந்தர்
3. உமாபதி சிவாச்சாரியார் 4. அருணந்தி சிவாச்சாரியார்

22) தண்ணீர்ப்பந்தலமைத்து அடியார்களின் தாகசாந்தியைப் போக்கித் தருமம் செய்தவர்
1. இளையான்குடிமாறநாயனார் 2. சிறுத்தொண்டர்
3. குங்கிலியக்கலயர் 4. அப்பூதியடிகள்

23) மரங்களில் இருந்து பெறப்படும் மலர்கள்
1. நிலப்பூ 2. நீர்ப்பூ 3. கோட்டுப்பூ 4. கொடிப்பூ

24) சைவ வித்தியாவிருத்திச் சங்கம் தோற்றம் பெற்ற ஆண்டு.
1. 1922 2. 1983 3. 1888 4. 1923

25) நல்லூர் கந்தசுவாமி கோயிலின் சண்முகவாசல் இராச கோபுரத்தின் உயரம்
1. 108 அடி 2. 208 அடி 3. 100 அடி 4. 105 அடி

26) அறுபத்து நான்கு சக்திபீடங்களில் ஒன்றான புவனேஸ்வரி பீடம் என அழைக்கப்படும் சக்தி ஆலயம்
1. வற்றாப்பளை கண்ணகை அம்மன் ஆலயம் 2. நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயம்
3. மாத்தளை முத்து மாரி அம்மன் ஆலயம் 4. தெல்லிப்பளை துர்க்கை அம்மன் ஆலயம்

27) கொக்கட்டிச்சோலை தான்தோன்றியீஸ்வரர் ஆலயத்தைப் பரிபாலனம் செய்வோர்
1. வண்ணக்கர் 2. பூசாரி 3. கப்புகனார் 4. கட்டாடிமார்

28) களுதாவளைப் பிள்ளையார் ஆலய தலவிருட்சம்
1. கல்லாலமரம் 2. வில்வமரம் 3. வன்னிமரம் 4. அரசுமரம்

29) ஈழத்தில் நாட்டார் கலைக்குப் புத்துயிர்ப்பு வழங்கியவர்
1. பேராசிரியர் இந்திரபாலா 2. பேராசிரியர் கைலாசநாதக்குருக்கள்
3. பேராசிரியர் சு.வித்தியானந்தன் 4. பேராசிரியர் அ.சண்முகதாஸ்

30) சதசத்து என அழைக்கப்படுவது
1. ஆணவம் 2. பதி 3. பசு 4. கன்மம்

31) ஆணவம் கன்மம் என இருமலங்களையுடைய ஆன்மாக்கள்
1. சகலர் 2. பிரளயாகலர் 3. விஞ்ஞானகலர் 4. திரிமலத்தார்

32) திருவாவடுதுறை ஆதீனத்தை ஸ்தாபித்தவர்
1. நமசிவாயதேசிகர் 2. ஆறுமுகநாவலர்
3. சுவாமி ஞானப் பிரகாசர் 4. மறைஞான சம்பந்தர்

33) மாணிக்கவாசக சுவாமிகள் முத்தியடைந்த தினம்
1. சித்திரைச்சதயம் 2. ஆடி சுவாதி 3. ஆனிமகம் 4. வைகாசி மூலம்

34) ஆன்மாக்களின் இறுதி இலட்சியம்
1. வீடுபேறு 2. இறைவனை வழிபடல்
3. இறைதொண்டு புரிதல் 4. கிரியைத்தொண்டு புரிதல்

35) பிரபோதசைதன்யர் எனும் தீட்சாநாமத்தைக் கொண்டவர்
1. அருணாசல தேசிகர் 2. புலவர்மணி பெரியதம்பிப்பிள்ளை
3. பண்டிதமணி சி.கணபதிப்பிள்ளை 4. சுவாமி விபுலாநந்தர்

36) ஆன்மாவும் சிவமும் கலந்து இரண்டற்று நிற்கும் நிலையை சைவசித்தாந்திகள் அழைக்கும் விதம்
1. பழமும் சுவையும்
2. நெருப்பும் சூடும்
3. அப்பினிடைஉப்பு
4. சார்ந்ததன்வண்ணம்

மேல்வரும் அட்டவணையைப் பயன்படுத்தி 37, 38, 39 வரையான வினாக்களுக்கு விடைதருக.

| | | |
|---|---|---|
| A அக்கினி | D வேதாந்தம் | G இருக்கு |
| B தத்துவ ஆராய்ச்சி | E ஸ்ரீசக்கரபூசை | H கங்காதரபுட்கரணி |
| C பிராமணத்தீவு | F 200 பாடல்கள் | I ஞானகாண்டம் |

37) வேதங்களோடு தொடர்புடைய பகுதி
1. AFG 2. ADH 3. CFI 4. AEG

38) உபநிடதங்களோடு தொடர்புடைய பகுதி
1. ADI 2. DBH 3. BDI 4. AEI

39) நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தோடு தொடர்புறும் பகுதி
1. AEF 2. CFG 3. BDG 4. CEH

40) "தண்ணளி வெண்குடைவேந்தன்...." எனப் போற்றப்படும் மன்னன்
1. இராஜராஜசோழன் 2. இராஜேந்திரசோழன் 3. மனுநீதிகண்டசோழன் 4. ஆதித்த சோழன்

(40x1 = 40 புள்ளிகள்)

## பகுதி - II

♦ **முதலாம் இரண்டாம் வினா உட்பட ஐந்து வினாக்களுக்கு விடை தருக.**

01) 1. இறைவனின் இருவகை நிலைகளும் எவை?
2. பஞ்சாங்கம் குறிப்பிடும் ஐந்து அங்கங்களும் எவை?
3. விநாயக சஷ்டி விரதம் அனுஷ்டிக்கப்படும் காலம் யாது?
4. மந்திரம், கட்டளை, துதி ஆகிய மூன்றும் கலந்துள்ள வேதம் எது?
5. ஆகமங்கள் எத்தனை? அவற்றில் இரு ஆகமங்களின் பெயரைக் குறிப்பிடுக?
6. திருநந்தவனம் என்பதன் பொருள் யாது?
7. வரதபண்டிதர் எழுதிய நூல்கள் இரண்டு தருக?
8. ஈழத்தில் காணப்படும் திரௌபதை அம்மன் ஆலயங்கள் இரண்டைத் தருக?
9. வைரவருக்குரிய விரதங்கள் இரண்டு தருக?
10. திருமுறைகளை ஓதுவதால் கிடைக்கும் நன்மைகள் இரண்டு தருக?

(10x2 = 20 புள்ளிகள்)

02) பின்வரும் பாடல்களுள் இரண்டினை அடிமுறை பிழையாது திருத்தமாக எழுதி, அவற்றின் பொருளினையும் எழுதுக.
1. "குனித்த புருவமும்....."
2. "பால் நினைந்தூட்டும்......"
3. "பாலுக்குப் பாலகன்......"
4. "விநாயகனே வெவ்வினையை...."

(5+3 = 8x2 = 16 புள்ளிகள்)

03) "வேதமோடாகமம் மெய்யாம் இறைவன் நூல்"
1. ஆகமம் என்ற சொல்லின் பொருள் இரண்டு தருக?
2. சிவாகமங்கள் ஒவ்வொன்றும் எத்தனை பிரிவுகளை உடையது அவை எவை?
3. சிவாகமங்களில் கூறப்படும் ஆலய வழிபாட்டோடு தொடர்புடைய விடயங்கள் பற்றி விளக்குக?

(2 + 2 + 4 = 8 புள்ளிகள்)

04) "வெள்ளை நிற மல்லிகை யோ வேறெந்தமாமலரோ" வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலரெதுவோ"

1. சுவாமி விபுலாநந்தரின் தாய் தந்தையர் பெயர் யாது?

2. சுவாமி விபுலாநந்தர் எழுதிய நாடக நூலையும், இசை நூலையும் குறிப்பிடுக?

3. விபுலானந்தரின் சமயப் பணிகள் பற்றி விளக்குக?

(2 + 2 + 4 = 8 புள்ளிகள்)

05) இதிகாசம் என்றால் இது இவ்வாறு முன்பு நடந்தது என்று பொருள்படும்

1. இதிகாசங்கள் எவை? அவற்றைத் தமிழில் எழுதியோர் யாவர்?

2. இராவணனைக் கொன்றதால் இராமனுக்கு ஏற்பட்ட தோசம் யாது? அது எவ்வாறு நீங்கியது?

3.இராவணன் திருக்கைலாய மலையைப் பெயர்க்க முற்பட்டதன் காரணத்தை விளக்குக?

(2 + 3 + 3 = 8 புள்ளிகள்)

06) "ஆன்ம விடுதலைக்குரிய மார்க்கங்களில் குருலிங்க சங்கம வழிபாடு முக்கியமானதாகும்"

1. குரு என்பதன் பொருளைத்தந்து குருவழிபாட்டால் மேன்மை பெற்ற இருவரைக் குறிப்பிடுக?

2. சங்கம வழிபாட்டின் சிறப்புக்கள் மூன்று தருக.

3. லிங்கத்தின் வகைகளைக் குறிப்பிட்டு விளக்குக?

(3 + 2 + 3 = 8 புள்ளிகள்)

07) பின்வருவனவற்றுள் எவையேனும் இரண்டிற்கு சிறு குறிப்பு எழுதுக?

1. வாய்மை
2. சரியைத் தொண்டு
3. வசந்தன் கூத்து
4. திருமூலர்
5. சைவதர்மம்

(4 + 4 = 8 புள்ளிகள்)

# மாகாணக் கல்வித்திணைக்களம்
# வடக்கு மாகாணம்.
# மூன்றாம் தவணைப் பரீட்சை - 2018

**சைவநெறி** **தரம் : 10**

## விடைத்தாள்

### பகுதி - I

| | | | | | | |
|---|---|---|---|---|---|---|
| 01) 2 | 02) 1 | 03) 3 | 04) 1 | 05) 3 | 06) 3 | 07) 4 |
| 08) 3 | 09) 1 | 10) 2 | 11) 1 | 12) 3 | 13) 4 | 14) 2 |
| 15) 1 | 16) 3 | 17) 4 | 18) 1 | 19) 3 | 20) 2 | 21) 3 |
| 22) 4 | 23) 3 | 24) 4 | 25) 1 | 26) 2 | 27) 1 | 28) 2 |
| 29) 3 | 30) 3 | 31) 2 | 32) 1 | 33) 3 | 34) 1 | 35) 4 |
| 36) 3 | 37) 1 | 38) 3 | 39) 4 | 40) 3 | | |

(40x1 = 40 புள்ளிகள்)

### பகுதி - II

01)
- 01. சொரூபநிலை, தடத்தநிலை
- 02. வாரம், திதி, யோகம், கரணம், நட்சத்திரம்
- 03. கார்த்திகை மாதத்து தேய்பிறைப் பிரதமை முதல் மார்கழி மாத வளர்பிறை சஷ்டி வரையுள்ள இருபத்தொரு நாட்கள்
- 04. அதர்வவேதம்
- 05. 28, காரணம், காமிகம் சிந்தியம் சுப்பிரபேதம், மகுடம், விமலம்
- 06. இறைவனுக்குரிய பூந்தோட்டம்
- 07. ஏகாதசி புராணம், சிவராத்திரிவிரதம்,
  பிள்ளையார் கதை
- 08. 1. ஆரையம்பதி திரௌபதி அம்மன் ஆலயம்
  2. பழுகாமம் திரௌபதி அம்மன் ஆலயம்
  3. புளியந்தீவு திரௌபதி அம்மன் ஆலயம்
  4. பாண்டிருப்பு திரௌபதி அம்மன் ஆலயம்
- 09. சித்திரைப்பரணி
  ஐப்பசிப்பரணி
- 10. நினைத்த காரிய சித்தி
  மனப்பயம் நீக்கம்

(10x2 = 20 புள்ளிகள்)

02) பாடல் - 5
பொருள் - 3 = 8 x 2 = 16 புள்ளிகள்

03)
1. தொன்று தொட்டு வழங்கி வரும் அறிவு
   ஆ + க + ம எனப்பிரித்து
   சிவஞானம், மோட்சாதானம், மலநாசம்
   இறைவனை அடைவதற்கான வழியைக் கூறும் ஞானநூல்
2. 4
   சரியாபாதம், கிரியாபாதம், யோகாபாதம், ஞானபாதம்
3. ஆலய அமைவிடம், அடியார் இயல்பு, ஆலய அமைப்பு, அர்ச்சகர் சிற்பாச்சாரியார் ஒழுக்கம்
   படிம இலக்கணம், வாகனங்கள் அமைக்கும் முறை, தேர் வடிவமைக்கும் முறை

(2+2+4 = 8 புள்ளிகள்)

04)
1. சாமித்தம்பி, கண்ணம்மை
2. நாடக நூல் - மதங்கசூளாமணி
   இசை நூல் -யாழ் நூல்
3. சமயநூல்கள் எழுதியமை சமயப்பிரசங்கம் செய்தல்
   சமயமாநாடு கருத்தரங்குகளுக்கு தலைமை தாங்குதல் பங்குபற்றுதல்
   அத்வைத வேதாந்த மரபின் முன்னோடி
   கணேசதோத்திர பஞ்சகம், கதிரையம்பதி மாணிக்கப்பிள்ளை இரட்டை மணிமாலை
   கணேசதோத்திர பஞ்சகம் முதலிய சமயம் சார்ந்த நூல்களை எழுதி வெளியிட்டமை

(2+2+4 = 8 புள்ளிகள்)

05) 1. இராமாயணம், மகாபாரதம்
இராமாயணம் - கம்பர்
மகாபாரதம் - வல்லிபுத்தூர் ஆழ்வார்

2. பிரமஹத்திதோசம் அதை நீக்க
திருக்கேதீச்சரம், திருக்கோணேச்சரம் முதலிய தலங்களைச் தரிசித்து இறுதியில் முன்னேஸ்வர தரிசனத்தினால் பிரமகத்தி தோசம் முழுமையாக நீங்கியது

3. இராவணனின் தாய் திருக்கோணேஸ்வரரை தினமும் சென்று தரிசித்து வந்த வேளை நோய் காரணமாக ஆலயம் செல்ல முடியவில்லை. இதனால் மிகவும் மனம் வருந்தினாள். தாயின் நிலை கண்ட இராவணன் கோணேசரை தாயாரின் இருப்பிடத்திற்கு கொண்டு வருவதற்காக கோணேச மலையை வாளால் வெட்டினான்.

(2+3+3 = 8 புள்ளிகள்)

06) 1. அஞ்ஞானத்தைப் போக்குபவர் அல்லது பாசத்தை நீக்குபவர்
திருமூலர், மங்கையர்கரசியார், குலச்சிறையார் அப்பூதியடிகள்

2. கீழான எண்ணங்களை நீக்கி உயர்நிலை எண்ணங்களை உருவாக்கும்
உலகப்பற்றை நீக்கும், தெய்வப்பற்றை வளர்க்கும், பக்தி வைராக்கியத்தை வளர்க்கும்

3. சிவலிங்கம் பரார்த்த இலிங்கம் இஷ்டலிங்கம் என இரு வகைப்படும்
பரார்த்தலிங்கம் தாவரலிங்கம் என்றும் அழைக்கப்படும். இது 5 வகைப்படும்
சுயம்பு லிங்கம், காணலிங்கம், தைவிகலிங்கம், ஆரிடலிங்கம் மானுடலிங்கம் என்பனவாகும்.

(3+2+3 = 8 புள்ளிகள்)

07) பொருத்தமான விடைகளுக்குப் புள்ளி வழங்குக.

(4+4 = 8 புள்ளிகள்)